உ

# மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ரஜதபந்தன புணராவர்த்தன

# மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

University of Jaffna
235.4
MAV
250271(AR; Main)

தேவஸ்தான வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ரஜதபந்தன புனராவர்த்தன

## மகா கும்பாபிஷேகச்

# சிறப்பு மலர்

தேவஸ்தான வெளியீடு


UNIVERSITY OF JAFFNA LIBRARY
235.4 MAV
ARCHIVES
250271
250271
University of Jaffna
250271
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மும் மொழிகளிலும்

★ அழகிய எழுத்துக்களில்

★ கண்கவர் வர்ணங்களில்

★ கலை வண்ணம் மிளிர

★ குறைந்த செலவில்

★ தரமான அச்சு வேலைகளைப் பெற

இன்றே விஜயம் செய்யுங்கள்

# சந்திரா அச்சகம்

151, யாழ்ப்பாண வீதி,

காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இலங்கையில் முதன்முதலாக நீண்டபெற்ற ரஜத பந்தன கும்பாபிஷேகம் இதுவேயாகும். ஜீர்ணோத்தா ரண அஷ்டபந்தன, ரஜதபந்தன மகா கும்பாபிஷேகம் 6-2-76ல் இவ்வாலயத்தில் நடைபெற்றது. ஜீர்ணோத் தாரண மென்பது பழுதடைந்ததைத் திருத்துதல் அஷ் டபந்தன மென்பது ஆதார சிலையில் பிம்பம் மேல் நோக்காமலும் கீழ்நோக்காமலும் உறுதியாக, வைக் கப்பட்டதுபோல் திடமாக இருக்கச்செய்ய எட்டுப் பொருட்கள் சேர்த்து இடித்த மருந்தினல் கெட்டி யாகச் சாத்துதல். ரஜதபந்தனமாவது அவ்வஷ்டபந் தனம் கெடாமல் கெட்டியாக இருப்பதற்காக வெள் ளிச் சுருள்கொண்டு பதியவைத்தல். தனவந்தர்கள் தங்கச் சுருள்கொண்டு பதியவைப்பார்கள். அது சுவர்ணபந்தன மெனப்படும்.

ரஜதபந்தன மகா கும்பாபிஷேகத் தினத்தன்று நடைபெற்ற சில கிரியைகளின் போது எடுத்த படங் களின் பிரதிகள் இம்மலரில் இடம்பெறுகின்றன. மேலும் இவ்வாலயம் வளர எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

இக் கும்பாபிஷேகத்துக்கும் திருப்பணிக்கும் ஊக்க மும், ஆக்கமும் அளித்த அன்பர்களுக்கும், கும்பாபி ஷேகத்தில் கலந்து கொண்டு வழிபாடு செய்தவர்க ளுக்கும் நிதியுதவிய அடியார்களுக்கும் எல்லா நன் மைகளும் மேன்மேலும் விருத்தியாக ஆசீர்வதிக்கின் றேன்.

ARCHIVES

இங்ஙனம்

**பொன். அம்பலவாணக் குருக்கள்**

ஷை தேவஸ்தான பரிபாலன ஆதீனகர்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற பஞ்ச குண்டங்களோடு கூடிய மகா கும்பாபிஷேகத்தை செய்யவேண்டும் என்று எம்மை ஆதீனகர்த்தா அவர்கள் கேட்டதற்கிணங்க சிவாகம விதிப்படி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் ஞாபகார்த்தமாக ஒரு சிறப்பு மலரை வெளியிட வேண்டும் என்று, அன்பர்களிடம் கட்டுரைகள் வாங்கி பிரசுரிக்கும் இம்மலருக்கு என்னை ஓர் ஆசியுரை வழங்கும்படி கேட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கும்பாபிஷேகம் நடைபெறவும் திருப்பணிகள் நடைபெறவும், மூலகாரணமாகவிருந்த ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்களுக்கும், கஷ்டப்பட்டு நிதி திரட்டிய திரு. வ. சுப்பிரமணியம் அவர்களுக்கும், நிதி உதவிய பக்தகோடிகள் எல்லோருக்கும் எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல விக்நேஸ்வரப் பெருமானின் பாத கமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. க. வேதாரணியக் குருக்கள்**
தேவஸ்தான உற்சவாசாரியரும்
கும்பாபிஷேகப் பிரதம குருவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

கொல்லன்கலட்டியில் கோவில் கொண்டெழுந்தருளிய வீர கத்திப்பிள்ளையார் சோழராச குமாரத்தியாம் மாருதப்புரவீக வல்லியால் பிரதிஷ்டை செய்யப் பெற்று இற்றைக்கு 50 – 60 வருடங்கட்கு முன்னர் மிகச் சிறிய தோற்றமளித்திருந்தது திரு. பொ. அம்பலவாணக் குருக்களின் பின் சந்ததியார்கள், ஆற்றிய அரும்பணியால் இவ்வாலயம் நல்நிலைக்குக் கொண்டு வரப்பெற்று 34 வருடங்கட்கு முன்னர் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது. பின்னரும் கோவில் திருப்பணியில் ஊரவர்களினதும், வழிபடுவோரினதும் உதவி கொண்டு பல திருப்பணிகளியற்றி இந்நல் நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

இக்கும்பாபிஷேக சம்பந்தமாக இவ்வாண்டில் சென்ற 8 – 9 மாதங்களாக ஸ்ரீ. பொன். அம்பலவாணக் குருக்களினதும் அன்னாரின் மருகர் ஸ்ரீ. சு. சிவஷண்முகானந்தக் குருக்களினதும் அயரா முயற்சியால் ஊரவரினதும், வழிபடுவோரினதும் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் இக்கும்பாபிஷேகம் நடைபெற ஏதுவாயது. இவர்களனைவரும் வீரகத்திப் பிள்ளையாரின் திருவருட்கடாட்சம் பெற்றுய்வராக.

ரஜதபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்று, 44 நாட்கள் வரை விசேட அபிஷேக ஆராதனைகள் நடாத்தப்பெற்று 45வது நாளாகிய இற்றைத் தினத்தில் மண்டலாபிஷேகம் நடைபெறும் வைபவத்தைச் சிறப்பிக்கும் பொருட்டு மலர் ஒன்றினை வெளியிட விரும்பி அச்சிறப்பு மலரில் இடம்பெற ஓர் செய்தி அனுப்புமாறு கேட்டுக் கொண்டதால் இதை அனுப்புவதில் அகமகிழ்கின்றேன்.

**அ. சின்னத்தம்பி**

வாளித் தொழிற்சாலை,
மாவிட்டபுரம்.
15-3-76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுரை

மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் சம்பந்தமாக வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு சிவஸ்ரீ சு. சிவ. சண்முகானந்தக் குருக்கள் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒரு செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாலயம் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஏழு விக்னேஸ்வர ஆலயங்களுள் முதன்மை பெற்றதென்பது சரித்திர வரலாறு.

இப்பொழுது இவ்வாலய தேவஸ்தான பரிபாலன ஆதீனகர்த்தாக்களுள் ஒருவராகிய சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்கள் அவர்களது பெருமுயற்சியால் சைவப் பெருமக்களின் பொருளுதவி கொண்டு, தூபிகளின் சித்திர வேலைப்பாடுகளுடன் சில திருப்பணிப்புனருத்தாரண வேலைகள் செய்து முடிக்கப்பெற்று மகா கும்பாபிஷேகமும் நிறைவேற்றியுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியனவாகும்.

இவ்வாலயம் இப்பொழுது இக்கிராமத்துக்கு ஓர் அணிகலனாக மிகப் பொலிவுடன் தோற்றமளிப்பதில் சைவமக்களாகிய நாங்கள் பெரிமிதம் அடைகின்றோம்.

நியாயமான அளவு ஆலயத் திருப்பணி வேலைகள் முழுமைபெற முக்கியமாகச் செய்யவேண்டிய வேலைகளில் சில இன்னும் எஞ்சியிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றுவதற்கு, பொதுவாக எல்லாச் சைவ மக்களும், சிறப்பாக இக் கிராம மக்களும் பொருளுதவி புரிந்து ஆதரிப்பது வேண்டற்பாலதாகும்.

ஆலயம் மேன்மேலும் பலவகைகளிலும் முன்னேற்றமடைய எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் அருள்பாலிப்பாராக.

**வ. சரவணமுத்து**
சமாதான நீதிபதி


கொல்லங்கலட்டி,
மாவிட்டபுரம்,
14 – 3 – 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட விளக்கம் முற்பக்கம்**

1. தேர்த்திருவிழாக்காட்சி.

2. விநாயக சதுர்த்தித் திருவிழாவன்று உயிர் யானையில் சுவாமி எழுந்தருளுதல்.

3. தற்போதைய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்கள் மானம்பு உற்சவம் செய்தல். அவரின் தந்தையார் ஆதீனகர்த்தா அமரர். அ. பொன்னையா தேசிகர் அருகில் நிற்கிறார்.

4. கும்பாபிஷேகப் பிரதமகுரு சிவஸ்ரீ க. வேதாரணியக் குருக்கள் கொடியேற்றக் கிரியைகளைச் செய்கின்றார். அருகில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்கள் நிற்கின்றார்.

**பட விளக்கம் எதிர்ப்பக்கம்**

1. புதிய விமானத்துக்குக் கும்பாபிஷேகம் செய்து அலங்காரம் செய்கின்றனர்.

2. மூல தேவர் குடமுழுக்கு விழாக்காட்சி.

3. விமான கும்பாபிஷேகம்.

4. பழைய விமானம்.

5. பிரதான கடம் யாகசாலையிலிருந்து எழுந்தருளி வீதி வலம்வருதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரமும் பலனும்

சிவஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்

மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது. மாந்திரீகன் கருடபாவனையால் எப்படி விடத்தை நீக்குகிறானென்றால் அவன் அமைதியான மனத்தோடு பரிசுத்தமுடையவனாய்த் தன்னைக் கருடபகவானாகப் பாவித்து உரிய மந்திரங்களைத் தனது அங்கங்களின் நியாசித்து, பின் விடம் தீர்க்கும் மந்திரத்தை உச்சரித்துச் செய்யும் கிரியைகளைச் செய்கிறான். விடம் நீங்குகிறது. இதை நாம் அனுபவ வாயிலாக அறிகிறோம்.

இதனிலும் மேலான பிரம மந்திரங்களும் அங்க மந்திரங்களும் அதிலும் மேலான மூல மந்திரங்களும் உண்டு. அவைகளும் விஷேட பலன்களைத் தருவனவே. சொல்லுக்கும் செயலுக்கும் சக்தி உண்டென்பதுடன் எண்ணத்திற்கும் சக்தி உண்டென விஞ்ஞானிகள் கூறுவர். ஒருவன் எண்ணும் எண்ணங்கள் உருக்கொண்டு வெளிச்சென்று பின் எண்ணியவனையே அடைகின்றன என்கின்றனர்.

உதாரணமாக ஒருவன் தனது காரியம் சித்தியடைய சுவாமிக்கு அபிஷேகம் செய்கிறான். அப்போது குருவின் மூலம் அதைச் செய்விக்க வேண்டும். குருவினால் ஓதப்படும் மந்திரம் பரிசுத்தமுடைய எசமானின் எண்ணம். இவை எல்லாம் எங்கும் நிறைந்துள்ள தெய்வீக சக்தியாகிய மின்சாரத்தை அக்கினியும் கும்பத்திலுள்ள நீரும் கிரகிக்கின்றது. கும்ப பூசை முடித்து யாகாக்கினி வளர்த்து ஆகுதிகள் செய்து முடித்து பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றது.

குருவும் எசமானும் பரிசுத்தமனமுடையவர்களாக இருக்க வேண்டும். குரு என்பது அஞ்ஞானமாகிய இருளை நீக்கி மெஞ்ஞானமாகிய அறிவைக் கொடுப்பவர். அப்படிப்பட்ட குருவே தகுதியுடையவர்.

கெட்ட எண்ணம் பொறாமை வஞ்சகம் முதலியவற்றைக் கொண்டுள்ளவர்கள் இப்படியான அபிஷேகத்தையோ யாகத்தையோ செய்யமுடியாது. யாகம் என்பது ஞானத்தைக் கொடுப்பது. எனவே அஞ்ஞானத்தையுடைய குரு அல்லது எசமான் எப்படி இப்படியான காரியங்களைச் செய்ய முடியும்?

பொறாமை வஞ்சகமுடைய குரு அல்லது எசமான் இப்படியான மேலான கிரியைகளைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தாலும் அக்கிரியையின் பலன் அவரது எண்ணப்படியே செய்பவருக்கும் செய்விப்பவருக்கும் கொடுக்கும்.

ஓர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்வதற்காக பழுதுற்ற பகுதிகளையும் இடிக்க வேண்டிய பகுதிகளையும் அதைச் செய்விப்பவரின் நண்பர்கள் சிலர் உதவியாக இடித்தார்கள். இதைக்கண்ட செய்விப்பவரின் பகையான ஒருவர் அதைக் கண்டு இடித்தவரின் உறவினர்களிடமும் நெருங்கிய நண்பர்களிடமும் கோவிலையும் இடிப்பதா இடிப்பவரின் சந்ததிக்கே கூடாது. அழிவுக்குத்தான் இவர்கள் இடிக்கிறார்கள் என்றெல்லாம் தூற்றினர்.

இப்படித் தூற்றியவர் அஞ்ஞானத்தையுடைய ஒரு குரு. அக்குரு எப்படி ஞானத்தைப் போதிப்பார். சிவபுண்ணியம் செய்யும் ஒருவரை தடைசெய்ய எத்தனித்த சிவத்துரோகியினால் எப்படி அஞ்ஞான இருளைப் போக்க முடியும். குருவென்று கூறினால் குருவாக இருக்க முடியுமா? இப்படியான குரு ஒரு யாகத்தைச் செய்தால் அல்லது செய்வித்தால் அக்கிராமவாசிகளுக்கே யாகாக்கினியில் எழும் புகை வழியாக அவரின் தீய எண்ணங்கள் பிரதிபலித்து கேடை உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆலய வரலாறும் வளர்ச்சியும்

சோழராச குமாரத்தியாகிய மாருதப் புரவீகவல்லியின் குதிரைமுகம் பிறர்பார் வைக்கு மாறியும் சொந்தப்பார்வைக்கு மாரு மலும் இருந்ததைச் சிந்தித்து உணர்ந்து ஏழு இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய்வ தாக நேர்த்திக்கடன் செய்து முதலாவதாக கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகரையும், பன்னாலை அளகொல்லை கும்பளாவளை பெரு மாக்கடவை ஆலங்குளாய் கல்வளை ஆகிய இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய் வித்ததன் பயனாக குன்மநோயும் குதிரைமுக மும் நீங்கியது.

கொல்லங்கலட்டியில் தற்போதுள்ள கேணிக்கு முன்பாக இருந்த ஆலமரத்தின் கீழ் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது மழை வெய்யில் முதலிய பட்ட இவ் விக்கிர கத்தை அயலில் உள்ள வீட்டில் வசித்து வந்த திரு. பூ. குமாரவேலு என்பவர் தமது வீட்டில் ஒரு பகுதியில் வைத்து அவரும் பிற ரும் வழிபட்டு வந்தனர். இப்படிப் பலரும் வழிபட்டு வந்தாலும் ஆசௌசகாலங்களில் பூசை செய்யமுடியாதிருந்ததாலும் தற்போது உள்ள பூஞ்சோலைக்கு மேற்கே மண்ணினால் ஆலயமமைத்து வழிபட்டு வந்தனர். திரு பூ. குமாரவேலு என்பவர் சிவபதமடைய அவர் மகனாகிய திரு. கு. பொன்னம்பலம் என்பவ ரும் தந்தையார் செய்து வந்த கைங்கரியங் களைச் சிறிதும் குறைவின்றிச் செய்து வந் தார். இவர் இருக்கும் போதேஇவரது மகன் சிவஸ்ரீ. பொ. அம்பலவாணக் குருக்கள் அவர் கள் சிவாகம விதிப்படி கர்ப்பக் கிருகம் அர்த் தமண்டபம் மகாமண்டபம் திருத்தமண்டபம் ஸ்தம்பமண்டபம் மடைப்பள்ளி முதலிய வற்றை அமைக்க விரும்பி அயலிலுள்ள காணியை தர்மசர்தனம் செய்வித்தும் விலைக்கு வாங்கியும் ஆலயத்தை விதிப்படி சுண்ணாம்பினால் தற்போதுள்ள இடத்தில் ஆலயமமைத்து 1872-ம் ஆண்டு வைகாசி ஸ்ரீ அத்த நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் செய்வித்தார். அன்று தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்ததுடன் நவராத் திரி திருவெம்பாவை சிவராத்திரி முதலிய காலங்களில் விஷேட அபிஷேக ஆராதனைக ளையும் செய்ய வேண்டிய கிரியைகளையும் செய்து வந்தார்.

தற்போதுள்ளபடி சுற்றுமதில் கட்டத் தீர்மானித்தும் பணவசதியில்லாதபடியால் அதற்கு நிலையமிட்டு வைத்தார். கட்டுவதா கத் தீர்மானித்தும் 1896-ல் அகாலமடைந்த தால் கட்டப்படவில்லை. சில மாதத்தில் ஸ்தம்ப மண்டபம் புயல் காற்றினால் சேத மாக்கியதால் திருவிழாக்கள் ஸ்தம்பித்தது ஆனால் நித்திய பூசைகள் கிரமமாக நடை பெற்று வந்தன.

அதன்பின் 1896-ம் ஆண்டு அவரது மகன் திரு. அ. பொன்னையா தேசிகர் அவர் கள் நிர்வாகப் பொறுப்பையும் குடும்பப் பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்தார் தந்தையார் இறந்த சில வருடங்களில் அய லவர் பலர் வற்புறுத்தியதனால் கோவிலை ஆடு மாடுகள் அசுத்தப்படுத்தாமல் சுற்று மதிலை தந்தையார் தீர்மானித்தபடி உருவாக் கினார். அத்தோடு தற்போதுள்ள சிறிய எழுந் தருளி விநாயக விக்கிரகத்தையும் கும்பாபி ஷேகம் செய்வித்தார்.

1925-ம் ஆண்டு திருடர்களால் மூலஸ் தான விக்கிரகம் புரட்டி ஆதார சிலையில் வைக்கப்பட்டிருந்த தங்கயந்திரத்தை களவாடியதால் விக்கிரகம் பாலஸ்தாபனம் செய்து ஆலய விமானத்துக்கு வர்ணம் வைத்து பழுதுகளைத் திருத்தி சில மாதத்தின் பின் 1926-ம் ஆண்டு அட்சய ஞு ஆனி ஸ்ரீ அனு நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் செய்வித்து தந்தையாரினால் நடத்தப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கார உற்சவத்தையும், சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, விநாயக சதுர்த்தி முதலிய புண்ணிய காலத்தில் அபிஷேக ஆராதனைகளும் மற்றும் செய்ய வேண்டிய கைங்கரியங்களைச் செய்தும் விஷேடமாகச் செய்ய வேண்டிய கிரியைகளையும் செய்வித்து வந்தார்.

இதன்பின் கோபுரம், யாகசாலை, வசந்த மண்டபத்தைக் கட்டி, கொடிமரம் நாட்டி, 1929-ம் ஆண்டு கொடியேற்றத் திருவிழாவை தொடக்கமாகக் கொண்டு மகோற்சவம், 8-ம் நாள் சப்பரத் திருவிழாவும், 9-ம் நாள் தேர்த் திருவிழாவும். 10-ம் நாள் பகல் தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடியிறக்கும் நடைபெற்று வருகிறன. பின் பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மூலஸ்தானம் பழுதுற்றிருந்ததால் அதை இடித்து வைரக் கல்லினுல் கர்ப்பக் கிருகம் அர்த்தமண்டபம் அமைத்து 1941ம் ஆண்டு பங்குனி மீ அத்த நட்சத்திரத்தில் மூலமூர்த்திக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் செய்யவேண்டிய திருப்பணிளைச் செய்து தேர் முட்டி மண்டபத்தையும் கட்டிக் குறையில் இன்றும் உள்ளது. தேர்த்திருப்பணியும் சிற்கள் அச்சுகள் செய்வித்தபின் ஸ்தம்பித்தது.

மேலும் சுருங்கக் கூறின் இவரது பெருமுயற்சியால் சிறியதாகவிருந்த கோவில், சுற்றுமதில், வசந்த மண்டபம், யாக மண்டபம், ஸதம்பமண்டபம், கோபுரம், வசந்த மண்டப வாயில், மடப்பள்ளி வாயில், மண்டபங்களை அமைத்து ஓர் பெரிய ஆலயமாக 62 ஆண்டு நிர்வகித்து 1958-ம் ஆண்டு மார்கழி மாதம் அமரத்துவமடைந்தார். இவர் புகழ் என்றும் அழியாது என்றும் நிலைத்திருக்கும். என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

பின்பு நிர்வாகப் பொறுப்பையேற்ற அன்னவர் புத்திரன் ஸ்ரீலஸ்ரீ. பொன். அம்பலவாணக் குருக்கள் தந்தையாரால் செய்யப்பட்ட கட்டிடங்களைப் பழுதுபார்த்துத் திருத்தி வந்தார். லட்சார்ச்சனை, விநாயக விரதம், 21 நாளும் விஷேட அபிஷேகங்கள், சதுர்த்தி அபிஷேகங்கள், புராண படலங்கள் இன்னும் அநேக வைபவங்களைத் தொடக்கி நடாத்தி வந்தார்.

1975-ம் ஆண்டு வைகாசி மீ மகா மண்டப, நிருத்த மண்டப வேலைகள் தொடங்கி மிகக் குறுகிய காலத்துள் முடிக்கப்பட்டது. ஆவணி மீ பாலஸ்தாபனம் செய்து தூபிகள் திருத்தி வர்ணம் வைத்தும், மடப்பள்ளி சுற்றுமதில் திருத்தி, மின்சார உபகரணங்கள் புதுக்கியும், இராட்சத ஆண்டு தை மீ 23-ம் நாள் 2-6-1976-ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## தேர்த் திருப்பணி

1929-ம் ஆண்டு தொடக்கம் பிரதானமாக தேர்த்திருவிழா நடைபெற வேண்டிய சூழ்நிலையேற்பட்டும் சகடையில் சிறிய அளவில் தேர் கட்டி விழா நடத்தப்பட்டு வந்தும் பல பொதுமக்கள் வேண்டுகோளின்படி திரு. அ. பொன்னையா தேசிகர் அவர்களால் திருப்பணி தொடங்கி தேர் சில்லுகள் அச்சு முதலியன செய்யப்பட்டபின் சில சூழ்ச்சிகளால் கைவிடப்பட்டது. ஆலயத்துக்குரிய சகடை பழுதடைய பல வருடங்களாக வேறு ஆலயங்களிலுள்ள சகடைகளில் தேர் கட்டி விழா நடாத்தி வரப்பட்டது.

இதைப் பார்த்து வருந்திய பொதுமக்கள் பலர் அஞ்ஞான்று நிருவாகஸ்த்தராக இருந்த பொன்னையா தேசிகரிடம் முறையிட்டும் வருந்தியும் எம்பெருமானைப் பிரார்த்தித்தும் வந்தனர். இதன் பலனக இவ்வூர் வாசிகள் பலர் சேர்ந்து திரு. வ. சரவணமுத்து அவர்களைத் தலைவராகத் கொண்ட ஓர் தேர்த் திருப்பணிச் சபையை உருவாக்கி பல வருட முயற்சியால் ஓர் அழகிய தேரை உருவாக்கி 1965-ம் ஆண்டு வைகாசி மாதம் எம்பெருமான் சர்வோபசாரங்களுடன் பக்தர்கள் அரகர கோஷங்கள் செய்ய திருநடனத்தோடு நூதனரதத்தில் ஆரோகணித்து பக்த கோடிகளுக்கு கிருபை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேணித் திருப்பணி

ஆலயத் தீர்த்தோற்சவம் உட்பிரகாரத்திலுள்ள திருமஞ்சனக்கிணற்றிலேயே தீர்த்தம் கொடுக்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பலர் விரும்பியும் முயற்சி எடுக்காது. விட்டனர். பின் திருமதி தையற்பிள்ளை இராமலிங்கம் என்பவர் கோவில் நிர்வாகஸ்த்தரைப் பலமுறை கேட்ட போது இது ஆலயத்துக்கு முன்பே, கேணி இருந்தாலும் இதை எம் மூதாதையர் தீர்த்தத்துக்கு உபயோகப் படுத்தாததாலும் பெருமான் திருவுளப் பாங்கின் வண்ணமே செய்யவேண்டுமென்று பூக்கட்டிப் பார்த்து திருவுளப் பாங்கு திருத்தும்படி வந்ததால் முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. த. செல்வரத்தினம் அவர்களும் ஊர் வாலிபர்களும் சேர்ந்து நிதி திரட்டியும் சிரமதானமூலம் செய்யக் கூடியவைகளைச் செய்தும் கேணியைத் துப்பரவாக்கி சுவர்களை புதிதாகக் கட்டி இளைப்பாறு மண்டபமும் அமைக்கப்பட்டது. முதன் முதலாக 1969-ம் ஆண்டு வைகாசி மகோற்சவத்தின் போது கேணியில் தீர்த்தமெடுக்கப் பட்டது.

## ரதாரோகண மண்டபத் திருப்பணி

புதிய தேர் செய்தும் தேரில் சுவாமி ஏற்றுவதற்கு மண்டபமில்லாத குறையை இவ் வூரவர்கள் பலர் சேர்ந்து தலைநகராகிய கொழும்பில் சபையை உருவாக்கி நிதி திரட்டி மண்டபத்தை உருவாக்கி 1971-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதை விரைவில் நடைபெற திரு. சு. துரைசிங்கம் அவர்களும், திரு. சி. சங்கரப்பிள்ளை அவர்களும் பலவகையில் ஊக்கமெடுத்தனர்.

இவ்வாறு பல திருப்பணிகள் பொது மக்கள் ஒத்துழைப்போடு நிதியும் மனமுவந்து அளித்ததால் தற்போது ஆலயம் எழில்மிகு தோற்றத்தோடு இருப்பதுடன் வளர்ச்சியடைந்திருக்கிறது. இன்னும் வளர்ச்சியடையுமென்பதில் ஐயமில்லை.

## ஆலய விழாக்கள்

இவ்வாலயத்தில் தினமும் 3 காலப் பூசைகள் சிவாகம முறைப்படி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வருஷப்பிறப்பின் போதும் சங்கிராந்தி புண்ணிய காலத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் பல பக்தர்கள் வந்து பெருமானுக்கு புதிய பட்டு வஸ்திரம் சாத்தி அர்ச்சனை வழிபாடுகள் செய்விப்பார்கள்.

ஆலய மகோற்சவம் வைகாசி மாதப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்கள் விழா நடைபெறும் கொடியேற்றத்தை முதலாகக் கொண்டு ஆரம்பித்து 8-ம் நாள் சப்பரத் திருவிழாவும், 9-ம் நாள் தேர்த்திரு விழாவும், 10-ம் நாள் பகல் தீர்த்த விழாவும், இரவு கொடியிறக்கு வைபவமும் நடைபெறும். 7-ம் நாள் இவ்வூரவர்கள் சேர்ந்து எழுந்தருளி விநாயகப் பெருமானுக்கு சாயரட்சைப் பூசையில் அதிகமான அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்விப்பார்கள். இக்காட்சி மிகவும் அழகாக இருப்பதுடன் பக்தி பரவசத்தையூட்டுவதாக அமையும்.

விநாயக சதுர்த்தி தினத்தில் சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார். நவராத்திரி தினங்களில் மூலமூர்த்திக்கும் மகாலட்சுமி அம்பாளுக்கும் விஷேட பூசைகள் நடைபெற்று விஜயதசமியினன்று மானம்பு உற்சவம் நடைபெறும். சர்வாலய தீபத்தினத்தன்று தீப தரிசனமும் மறு நாள் தொடக்கம் 21 நாட்கள்வரை விநாயக விரதம் விநாயகப் பெருமானுக்கு பகல் இரவு ஆகிய இரு காலங்களிலும் விஷேட அபிஷேகமும், சோட சோபசார மகா பூசை நடைபெறுவதுடன் காலையில் பிள்ளையார் கதை படிக்கப்படும். விநாயகசஷ்டி தினத்தன்று மாலையில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிள்ளையார் கதைபடித்துத் திருவிழா நடைபெறும். முதன் நாள் மாலை கஜமுகாசுரசங்காரத் திருவிழா நடைபெறும். தைப் பொங்கல், தைப்பூசம் முதலாய தினங்களில் அபிஷேகமும், திருவிழாவும், மாசி சங்கட சதுர்த்தித் தினத்தில் மாலை சங்காபிஷேகம் நடைபெற்று, சந்திரோதயத்தில் விஷேட பூசை, ஆராதனைகள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒவ்வொரு மாத சுக்கிலபக்ஷச்ச சதுர்த்தியில் உச்சிக்காலப் பூசையில் அபிஷேகமும் நடைபெறும் ஒவ்வொரு சுக்கிர வாரமும் சாயரட்சையில் விஷேட பூசையும் நடைபெறும். மேலும் ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகள், புரட்டாதிச் சனிக்கிழமைகள், ஐப்பசி வெள்ளிக்கிழமைகள், ஆவணி ஞாயிற்றுகிழமைகள், தீபாவலி முதலிய காலங்களில் விஷேட பூசைகள் நடைபெறும். அநேக அடியார்கள் சுவாமி தரிசனம் செய்வார்கள்.

சிவராத்திரி, திருவெம்பாவை முதலிய காலங்களில் மூல மூர்த்திக்கும் சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கும் உரிய விதிப்படி ஆராதனைகள் நடைபெறும்.

தெண்டாயுதபாணிக்கு சுக்கிர வாரந்தோறும் ஸ்கந்தசட்டி, குமாராலய தீபம் முதலிய காலங்களில் விஷேட பூசையும் மகாலட்சுமிக்கு நவராத்திரி வரலட்சுமி விரதம் முதலிய தினங்களிலும், சனீஸ்வரனுக்குப் புரட்டாதி மாசத்துச் சனிக்கிழமை தோறும் விஷேட ஆராதனைகள் நடைபெறும்

**சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்**

# சமய வாழ்க்கை

**திரு. த. சரவணபவன்**

(இளைப்பாறிய O. A. அவர்கள்)

**(1) அரனை மறவேல்**
**(2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று**
**(3) திருமாலுக்கு அடிமை செய்**
**(4) கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**
**(5) நீறில்லா நெற்றிக்கு அழகு பாழ்**

இவையாவும் நமது முன்னோரது திருவாக்குகளாகும். மனிதன் சர்வ வல்லமை கொண்டவனல்ல. மனிதனுக்கு மேற்பட்ட ஒரு சக்தி உலகில் நிலவி வருகின்றது. அஃது தான் தெய்வ சக்தி. வானவர்களும் மண் மேல் வந்துதான் பேரின்பம் பெறுவர். ஆணவமலத்தை அகற்றி, மாயையைப் போக்கி, இறைவனடி சேரச் செய்யும் இடம் பூலோகம்தான். ஆகவே நமது முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் வரும் சந்ததியினரும் வழிபடசெய்தனர். அங்ஙனம் பழமையும் தொன்மையும் சரித்திரப் பிரசித்தியும் வாய்ந்த ஆலயங்களுள் ஒன்றே எட்டாம் நூற்றுண்டளவில் நிலைத்த கொல்லங்கலட்டி விரகத்திப்பிள்ளையார் ஆலயம். இத்தகைய ஆலயத்தை பாதுகாக்க முன்னோர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம். வருங்கால சந்ததியினருக்கும் இந்த விநாயகராலயத்தை நன்கு ஒப்படைக்க கண்ணை இமை காப்பதுபோல நாம் ஆலயத்தை காப்பாற்ற வேண்டும்.

சமயகுரவர்களுள் உழவாரப் பணியாற்றிய திருநாவுக்கரசு சுவாமிகள் இறைபணியில் தோய்ந்து பேரின்பம் பெற்றவர். மனிதவாழ்வில் இறைவனின் திருப்பணிக்கு வாய்ப்புக் கிடைப்பது எளிதல்ல.

நாம் போற்றி வழிபட்டுவரும் வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் 23-1-76-ல் நடைபெற்றது. மண்டலாபிஷேகம் 45ம் நாள் 21-3-76 அன்று நிகழ்த்த உள்ளனர். ஆலய பரிபாலன ஆதீன கர்த்தாக்கள் திருப்பணி வேலைகளில் காட்டிவரும் ஆர்வமும், அன்பர்கள் பொருள் உபகரிப்பதிலும், விழாக்களை நிகழ்த்துவதிலும் காட்டும் பண்பும் பாராட்டிற்கு உரியது. எதிர்நோக்கும் மண்டலாபிஷேக விழாவினை அனைவரும் தரிசித்து எம் பெருமானின் அருட்சக்தியைப் பெற்று மகிழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

எஸ். இராஜ. ஷண்முகரத்தினம்
(அதிபர், காங்கேசன்துறை
மகாவித்தியாலயம்.)

அரிது அரிது மானிடராதல் அதிலும் அரிது கூன் குருடு இன்றிப் பிறத்தல். சொல்லரும் பிறவிகளில் பிறந்திளைத்து ஆறு அறிவுடைய மானிடப் பிறவியை, பெறற்கரிய பிறவியை பெற்ற நாம் நமது வாழ்க்கையை வளமுடையதாக, இன்பமுடையதாக அமைப்பதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கிறோம். ''வாழ்க்கை வாழ்வதற்கே'' வாழ்க்கையை இன்பமயமாக்குவது நமது சாதனைகள் செயற்கரிய சாதனைகளை செய்தவர்கள் பெரியோர். ''ஈன்றாள் பசிகாண்பானாயினுஞ் சான்றோர் பழிக்குஞ் செயலை செய்யாது எல்லாப் பிறவிக்கும் பயனைத் தரக்கூடிய செயல்களை செய்வதன் மூலம் நிலையான வாழ்க்கைப் பயனை அடைய முடியும். நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் வாழ்க்கை இவ்வுண்மையை விளக்குகின்றது.

வேடுவர் குலத்திற் பிறந்த திண்ணனார் தமது தூய்மையான உள்ளன்பால் இறைவனை இரட்சித்தார். பேரின்பம் பெறுவதற்காக அப்பரும் சுந்தரரும் ஆளுடை பிள்ளையும் மற்றும் தொண்டர்களும் தமது புனிதமான செயல்கள் மூலம் இறைவனது திருவருளைப் பெற்றனர் என்கின்றன புராணங்கள். அவர்கள்தமது சாதனைகள் மூலம் அழியாவுடம்பை பெறுவதற்கு வழிகாட்டியுள்ளனர்.

இறைவனை அடைவதற்கு நவ வித பக்தி உள்ளதாக பாகவத்தில் கூறப்படுகின்றது. ஒன்பது தினுசான பக்தி மார்க்கத்தை பிரகலாதன் விளக்குகின்றான். சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவை, அர்ச்சனை, வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம் என்று ஒன்பது வித பக்தி. சர்வ பங்க தியாகம் செய்து தனக்கென எதுவும் இல்லாத பரிபூரண சரணாகதி அடைவது ஆத்ம நிவேதனம். ''தான்'' என்பது இன்றி பரமாத்மாவாகும் நிலையே அத்வைதம். பக்தியின் உன்னத நிலையில் ஜீவாத்மா பகவானுக்கு நிவேதனமான அப்புறம் அது ஜீவன் என்ற இரண்டாம் நிலையை அற்று நிற்கின்றது. ஆத்ம நிவேதனம் மாணிக்கவாசகர் ஆத்ம நிவேதனம் செய்தார். ஞானசம்பந்தர் இறைவனிடத்திலே தகப்பனாரிடம் பிள்ளை இருப்பதுபோல் பழகினார். அவர் முருகன் அவதாரம் என்று சொல்வார்கள். இதிலே இந்த சத்புத்திர மார்க்கத்திலே, தாஸ்ய மார்க்கத்திலே இருக்கிற அடக்கமும் பயபக்தியும் ஸக்யத்தில் இருக்கிற நட்பும் காணப்படுகின்றது. தகப்பனாரோடு பிள்ளை பழகுகின்றபொழுது பயமும் ஓரளவு சுவாதீனமும் கலந்து காணப்படுவதுண்டு. தகப்பன் பிள்ளை என்ற பரம திருப்தி. வேதத்திலே சொன்னதுபோல் பிதாவே புத்திரனாகவும் வருவதால் இதில் ஆத்ம நிவேதனமும் காணப்படுகின்றது. முருகன் திருவதாரமாகிய திருஞானசம்பந்தர் இறைவனுடன் வெவ்வேறு விதமாகக் கலந்து சத்புத்திர மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் அறிவு அநுபவம் எல்லாவற்றிலும் முதிந்தவர் அப்பர் பெருந்தகை. இருந்தாலும் பரமேசுவரனை நெக்குருகப் பாடிக்கொண்டிருந்தவர். உழவாரப்படை மூலம் புண்ணிய தலங்களில் புல்லைச் செருக்கி பாதையைச் சரிசெய்து கொண்டு தாஸ மார்க்கத்திற்கு உருவமாக விளங்கினவர். சுந்தரருக்கு இறைவனிடத்தில் நிறைந்த சுதந்திரம் இருந்தது. திருவாரூரில் பரவையிடம் பெருமானையே தூது அனுப்பியவர். மாணிக்கவாசகர் பரம்ஞானி பரமாத்மாவுடன் தன்னை இரண்டறக் கலந்தவர். ''சிவமாக்கி எனையாண்ட'' என்று ஸ்வாமியோடு இரண்டறக் கலந்தவர்.

250271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான பக்திகளில் சாதாரண மக்களும் பக்தி செய்வதற்கு சிரவணம் கீர்த்தனம் ஆகிய இருவகை பக்திகள் உண்டு. கீர்த்தனம் பாடுவது பேசுவது இறைவனுடைய பெருமையை புகழைப் பாடுவதும் பேசுவதும் கீர்த்தனம். இவற்றைக் கேட்பது சிரவணம் எனப்படும். கேட்பதற்கு எவ்வித சிரமமோ, செலவோ இன்றி மனதை ஒருவகைப்படுத்தி இறைவனது புகழை அடியவர்தம் பெருமைகளைக் கேட்பது சாலச் சிறந்தது.

இந்த வகையிலே ஆலயங்களிலே மக்களை இறைவனிடத்து ஆற்றுப்படுத்துவதற்காகவே ஆலய அறங்காவலர்களும், உபயகாரர்களும் உபந்நியாசங்களையும், பஜனைகளையும் காலத்துக்கு காலம்—குறிப்பாக உற்சவ காலங்களிலும் அமைப்பது வழக்கமாகிவிட்டது. இப்பணியிலே நமது கொல்லங்கலட்டி பிள்ளையார் ஆலயத்திலும் சிறந்த நித்திய நைமித்திய கிரியைகளோடு பிரசங்கங்களும், பஜனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே சகல விக்கினங்களையும் தீர்க்கவல்ல விநாயகப் பெருமானை வழிபடுகின்ற நாமும் இறைவனுடைய திருவருளை பெற்று நிலையான பேரின்பத்தை அடைந்த அடியார்களைப் பின்பற்றி மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து — வாழ்வாங்கு வாழ்ந்து நற்கதியடைந்துய்வோமாக. விநாயகப் பெருமானுடைய பெருஞ்சாந்தி விழா நமக்கு சகல சௌபாக்கியங்களையும் பெறற்கரிய பேற்றையும் அருளுமாக!

---

# இன்றைய ஆலயம்

**மாவை வே. சு. கனகரத்தினம்**
ஆசிரியர்

கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் பல வருடங்களாகப் பல திருப்பணிகள் நடைபெற்று வந்தன. முன்பு கற்திருப்பணியால் செய்யப்பட்ட கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் ஆகியவற்றிற்கமைய விதிப்படி 1975-ம் ஆண்டு வைகாசி மீ மகா மண்டபம் நிருத்த மண்டபம் அமைத்து ஆவணி மாதம் கூரை வேலையும் முடிக்கப்பட்டது. அம்மாதம் பாலஸ்தாபனம் நடைபெற்று விமானங்கள் சித்திர வேலைகள் செய்து சுதைகள் வைத்து 6-2-76-ல் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ரஜதபந்தன புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய் என்று சம்பந்தப் பெருமான் திருவாக்கால் நாம் உணரவேண்டும் பெருஞ்சாந்தி என்பது கும்பாபிஷேகம். அக்கும்பாபிஷேக தரிசனம் எமக்குக் கிடைப்பது பெரும் பேறு. அதுவும் எமது கிராமத்தில் கிடைப்பது மிகவும் அரிது, 34 வருடங்களின்பின் இக்கும்பாபிஷேகம் இதுவரை நடைபெறாத முறையில் ரஜதபந்தனம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயத் திருப்பணிகளை சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்கள் அவர்களின் பெருமுயற்சியால் அடியார்களின் மனம் சலியாது பணவுதவி செய்ததன் பயனாக இவ்வளவு திருப்பணிகள் நடைபெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் இவ்வாலயம் சிறப்படைய பொதுமக்களாகிய நாம் சிரமதானம், பணவுதவி முதலியன செய்யவேண்டும். ஆலயம் முன்பு இருந்த நிலையிலும் தற்போது எழில் மிகு தோற்றத்துடன் மிளிர்கிறது. மேலும் ஆலயம் வளர்ச்சியடைய நாம் ஒத்துழைக்க வேண்டும். கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என மூதாட்டி கூறிய வாக்கைச் சிந்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமான்

திரு. ந. கனகேஸ்வரன் B. Sc.
விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலரால் நோக்குண்டாம்—மேனி
நுடங்காது பூக்கொண்டு துப்பாரதுருமேனி
தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான்தருவேன் —
கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா.

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனார் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
யானைந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தை பணிந்து வாழ்வாம்.

என்று பெரும் புலவர்கள் பிள்ளையாரை முன் வைத்தே பாடியதிலிருந்து இந்துக்கள் வாழ்வில் பிள்ளையார் எவ்வாறான இடத்தைப் பெற்றுள்ளார் என்பது எமக்கு தெளிவாக விளங்குகின்றது. எந்தத் தொழிலை முதலில் தொடங்கும் போதும் பிள்ளையாரை முன்வைத்தே தொடங்கும் வழக்கம் பண்டு தொட்டு இன்றும் நாம் காணக்கூடியதாய் உள்ளது. சாதாரணமாய் ஒரு கடிதம் எழுதும் போதும் பிள்ளையார் சுழியைப் போட்டே தொடங்குகின்றோம். ஆகவே விக்கினேஸ்வரன் என்னும் வேறு பெயரும் உண்டாயது. விக்கினங்கள் நீக்குபவனாதலால் விக்னேஸ்வரன் என்று அழைக்கின்றனர்.

பிள்ளையாருக்கு மறுபெயராக கணபதி என்றும் கூறுவர். கணபதி என்னும் போது அதற்கு உள்ளார்ந்த தத்துவக் கருத்துக்கள் பல உள க என்றால் மனோவாக்குக்கள், ண என்றால் அந்த மனோவாக்குக்களைக் கடந்த பொருள் என்றும் பதி ஈஸன் இன்னும் சிலர் க என்றால் அறிவு என்றும், ண என்றால் வீடு என்றும், அறிவிற்கும் வீட்டிற்கும் ஈஸன் என்று பொருள் படுத்துவர்.

கணபதி மூஷிகத்தை வாகனமாகக் கொண்டுள்ளார். மோதகத்தை விரும்பி உண்பவர். வாகனமாகிய மூஷிகம் எமது உலகைப் பற்றை அடக்கி ஆழ்பவர் கணபதி மோதகம் ஞானத்தைக் குறிக்கும். ஆகவே அவர் ஞானத்தை விரும்புபவர். ஆனதினாலேதான் ஔவையார் சங்கத்தமிழ் மூன்றுந் தா என்று இரந்து நின்றார்.

பிள்ளையாரை பிரமச்சாரியாகவே உருவகப்படுத்தியபோதும் பிள்ளையார் அறிவையும் பயனையும் தருவதால் அவருக்கு சித்தி, புத்தி, என்ற தேவிகளும் ஷேமம் லாபம் என்ற புதல்வர்களும் இருப்பதாகக் கூறுவர்

பிள்ளையாரை இந்துக்கள் மட்டுமல்ல பௌத்தர்களும் கண தெய்யோ என்று வழிபடுகின்றனர். கணபதி வழிபாடு திபெத்து, பர்மா, ஜாவா, இந்தோசீனா, முதலிய நாடுகளிலும் காணக்கூடியதாக உள்ளது. பிள்ளையாரைப்பற்றி வேதங்களிலோ அல்லது சங்க நூல்களிலோ காணவில்லை. கி. பி. 2-ம் நூற்றாண்டளவில்தான் பிள்ளையாரைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. இத்தெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம் நரசிம்மபல்லவன் காலத்தில் சாளுக்கிய நாட்டுடன் நரசிம்மபல்லவன் போர் தொடுத்து வென்றபோது அவனின் சேனாதிபதியாகிய பரஞ்சோதி (சிறுத்தொண்டநாயனார்) வாதாபியிலிருந்து தென்னாட்டுக்கு கொண்டு வந்தார். அன்று தொட்டு தென் நாட்டில் பிள்ளையார் வணக்கம் பரவலாயிற்று.

மகாபாரதத்தை வியாசர் சொல்ல பிள்ளையார் எழுதினார் என்றும் சிவபெருமான் தந்திர நூல்களை சொன்னபோதும் அவற்றை ஏட்டில் எழுதினார் என்றும் கதைகள் உண்டு. கதைகள் பலவாயினும் விநாயகரை பக்தியுடன் தொழுதால் அவர் வேண்டிய வரங்களைத் தந்தருளுவார். அவரை அன்புடன் போற்றி வணங்குவதற்கு விநாயக சதுர்த்தி, விநாயக ஸஷ்டி வெள்ளிக்கிழமை இம்மூன்று தினங்களும் மிக விசேடமாகும். இவற்றுள் விக்கினங்களையெல்லாம் தீர்த்து அருளுபவர் விநாயகர். எனவே அவரை வணங்குவதற்கென்றே சதுர்த்தி விரதம் வருடந்தோறும் கொண்டாடப்படுகிறது.

எல்லோரும் விநாயகப் பெருமானை வணங்கி கல்வி, செல்வம் யாவும் பெற்று உய்வீர்களாக.


உ

"கும்பாபிஷேக தினத்தை ஏற்படுத்திய அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் இறைவன் அருள் பாலிப்பாராக"

**யாழ் நகரில் எவ்வித கட்டிடப் பொருட்களுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்**

**★ பாமா ஹாட் வெயர்ஸ் ★**

**கம்பி வகைகள், பித்தளை, இரும்பு, மரஸ்குறு வகைகள், கூரைத் தகரம், பிளேன் தகரம், தீந்தை, வாணிஸ் வகைகள், எல்க் ஆர்க் வெல்லிங் குச்சி.**

மற்றும் எல்லாவிதமான கட்டிடப் பொருட்களுக்கும்

**பாமா ஹாட் வெயர்ஸ்**

*11/3 ஸ்ரான்லி வீதி,*

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக பரத்துவம்

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.''

ஞானத்தை வழங்குகின்ற பெருமான் விநாயகர். யோகிகள் இவரை மூலாதாரத்துத் தெய்வமாகப் போற்றுவர். அருணகிரி நாதர் அநுபூதியின் தொடக்கத்தில் இரண்டு இடங்களில் விநாயகரை வழிபடுகிறார். கோயிலுக்கு நாம் சென்றடைந்தவுடன் முதலிற் காட்சி அளிப்பவர் திருக்கோயில் வாசலில் இருக்கின்ற துவார கணபதியாவர். அடுத்துக் கோயிலுக்குள்ளே புகுந்தால் அங்கேயும் விநாயகர் எழுந்தருளியிருப்பார். அநுபூதியில் 'பஞ்சக்கர ஆனை' என்று முதலிலே பாடித் துதித்து அடுத்த பாடலில் ''தேடுங் கயமா முகனைச் செருவில், சாடும் தனியானை'' என்று பாடுகின்றார். விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவதன் நோக்கம் உள்ளத்தில் இடம்பெற்ற ஆங்காரம் நீங்கி ஓங்காரத்தின் மூலம் ஞானம் உதயமாக வேண்டும் என்பதற்காகவேயாகும். இதனாலேயே 'ஞானக்கொழுந்து' என்று விநாயகப்பெருமானுக்குச் சிறப்பு நாமமும் உண்டு. கன்று, கொழுந்து, பிள்ளையார் என்னும் நாமங்கள் அவருடைய இளமைத் தன்மையை விளக்குவனவாகும். வழிபடுவோருக்கு இளமையும் இனிமையும் நல்கி உள்ளத்தைக் குழந்தை உள்ளமாக்கி ஞானச்சுடரை ஏற்றிவைக்கும் சக்தி விநாயக வழிபாட்டுக்குண்டு.

## பஞ்சக்கர ஆனை:

' செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம்பணிவாம்''

என்பது அநுபூதி. பஞ்சக்கர ஆனை என்றால் ஐந்து கரங்களை உடைய ஆனை, அட்சரங்களை உடைய ஆனை என்றும் பொருள்படும். பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும் பரம்பொருளும் அவனும் ஒன்றே. இறைவன் வேறு விநாயகன் வேறு அன்று ஐந்து கரங்களிலும் ஏந்தி இருக்கின்ற பொருட்களை எடுத்துக் கொண்டால் மோதகம் படைத்தலையும் தந்தம் காத்தலையும் அங்குசம் அழித்தலையும் பாசம் மறைத்தலையும் கமண்டலம் அருளலையும் விளக்குவன. இதனைவிட ஐந்து அட்சரங்களையுடைய யானை என்பதை உணரும் பொழுது அவருடைய திருமுகமே திருவைந்தெழுத்தின் அடக்கம் என்பதை அறியலாம். யானைமுகம் பிரணவத்தின் அடையாளம். பிரணவம் திருவைந்தெழுத்தின் அடக்கம்.

''இறைசக்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள்''

ஓங்காரமாகிய பிரணவத்துள் அடங்காதது எதுவும் இல்லை. அதனையே விநாயக வடிவம் காட்டுகிறது.

## தனியானை:

கயாசுரன் யானை வடிவமுடையவன். ஆனால் அது ஆணவத்திற்கு அடையாளமான வடிவம். ஆணவத்தை யானையாக வருணிப்பார்கள் அறிஞர்கள். யானைக்கு மதத்தினால் மயக்கம் ஏற்படுவது போல ஆணவத்துக்கு மயக்கும் சக்தி உண்டு. இந்த அசுரன் தேவர்களுக்கும் நல்லவர்களுக்கும் தீங்கு செய்வதில் இன்பங்கண்டவன். நல்லவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடித்தேடித் தீங்கு செய்தவன். அதனாற்றான் 'தேடுங் கயமாமுகன்' என்று பாடினார். அசுரர்கள் பழிவாங்கும் தன்மை வாய்ந்தவர்கள். ஆனால், ஆண்டவன் அவர்கள் செய்த பழிகளை மன்னித்து அவர்களுக்கே நன்மை செய்யும் பேரருள் வாய்ந்தவர். ஆனைமுக அசுரனுக்கு முன்னே எதிர்ப்பட்ட விநாயகர் ஆனைமுகத்தோடேயே காட்சி அளித்தார். ஆனால் அந்த ஆனையும் இந்த ஆனையும் ஒரேதன்மை வாய்ந்தவையன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரனுகிய யானை பிறருக்குத் துன்பஞ் செய்வதில் மகிழ்ச்சி காண இந்தத் தனியானை இன்பம் செய்வதில் மகிழ்ச்சியடைந்தது. அதுவுமன்றிக் காட்டிலே உள்ள யானைகள் போன்று மயக்கமாகிய மதத்தைப் பொழியாமற் கருணையென்கின்ற மதத்தைப் பொழிவது; ஏனைய யானைகள் காட்டிலே திரிவது போல இது உள்ளமெனுங் கூடத்தில் உலாவுவது; மற்றையவை அங்குசத்தால் அடக்கப்படுவன; இந்த யானை தன் கரத்திலுள்ள அங்குசத்தால் அகந்தையை அடக்கிவிடுவது.

''அஞ்சுகர ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன
அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே.''

## விநாயக வடிவம்:

நாம் காணும் புறக்காட்சியின் நோக்கம் அகக்காட்சி சிறக்கவேண்டும் என்பதற்காகவே. இந்தக் குறிக்கோளுடனேதான் இறைவனுக்கு உருவத்திருமேனி அமைத்து அழகு செய்கின்ருேம். விநாயகரை நோக்கிஞல் எமக்குத் தெரிவது குழந்தை வடிவம். பருத்த உடம்பு குழந்தைகளுக்கு அழகு தருவன. அதேபோன்று மெலிந்த உடம்பு வயோதிபருக்கு அழகு தருவன. குழந்தை மெலிந்தால் வைத்தியருக்குக் காட்டி ஆலோசனை பெறுவதுபோல் வயோதிபர் பருத்தால் அந்த நிலைக்கு ஆளாகலாம். எனவே, கொழுத்த உடலும் தொந்தி வயிறும் குட்டைக் காலும் குழந்தை நிலையை எடுத்துக் காட்டுகிறது. அதனை மெய்ப்பிக்கவே இனிமையான படையல்களையும் படைக்கிருேம். முகம் பிரணவத்தையும், செவிகள் மலவெப்பத்தை மாற்றுவதையும், முக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துவன. பருத்த வயிறு அண்டங்கள் தோன்றுவதற்குரிய இடமென்பதைக் காட்டுகிறது. அபரஞானம், பரஞானம் என்கின்ற திருவடிகள் எமது அடைக்கலத்துக்குரிய இடம் அவையென்பதைத் தெரிவிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நல்லுணர்வை எழுப்புவது அவருடைய வாகனம் ஆன்மாக்கள் எல்லாம் எலிகளாக நின்று எம்பெருமானைத் தாங்க வேண்டும் என்ற கருத்தும் ஞான சொரூபியைத் தாங்குவதால் எந்தவிதமான பாரமும் நமக்கு ஏற்படாது என்பதும் முன்பிருந்த பாரமே நீங்கிவிடுவதற்கு அதுவே வழி என்பதும் புலப்படுகிறது.

## பிரணவரூபி:

பிரணவம் என்பது 'ஓம்' என்னும் மூலமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. அகர, இகர, உகரம் என்னும் மூன்றெழுத்தோசைகளாலும் அமைந்தது. ''அ'' என்னும் ஒலி பிரமாவையும் ''இ'' என்னும் ஒலி விஷ்ணுவையும் ''உ'' என்னும் ஒலி உருத்திரனையும் குறித்து மும்மூர்த்திகளும் பிரணவத்துள் அடங்கியுள்ளார்கள் என்பதைப் புராணங்கள் காட்டுகின்றன. வாக்கின் முதனிலையே பிரணவமென்பது உபநிடதக் கொள்கையாகும். காயத்திரி மந்திரத்திலும் ஓங்காரத்தின் சிறப்புக் கூறப்படுகிறது. வேதங்களின் தோற்றமே ஓங்காரத்தை உட்பொருளாகக் கொண்டதென்பர். காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்துப் பிரணவ எழுத்தாக அமைந்து நாதவிந்துக்களின் சேர்க்கையால் உருவாகியதென்பர். விநாயகப்பெருமானின் துதிக்கை நாதவிந்து வடிவமாக அமைந்துள்ளது. நாம் ஒன்றை எழுதத் தொடங்கும்போது பிள்ளையார்சுழி போடுகிருேம். இது நாதவிந்து தத்துவத்தையே புலப்படுத்துகிறது. இதனை மௌனக்கரம் என்று சொல்வர். நாதவிந்து தத்துவம் சிவத்தையும் சக்தியையும் உணர்த்துவன. எனவே சிவமும் சக்தியும் ஒன்றுகிய தன்மையே விநாயகரின் திருவருட் தோற்றமாகும்.

''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணஅற் புதமலர் தலைக்கணி வோமே''

## முதற் பூசைக்குரியவர்:

தன்னை வழிபடுவோர்களுடைய விக்கினங்களைத் தீர்ப்பதும் அவரவர் வழிபாட்டை ஏற்றுச் சித்தியையும் புத்தியையும் வழங்குவதும் விநாயகப் பெருமானின் திருவருட் சிறப்பாகும். இம்மூர்த்தத்தின் பெருமையை உணர்ந்த பெரியோர் தனியாலயங்கள் பலவற்றை அமைத்து வழிபட்டனர். அதுமாத்திரமல்லாமல் வேறு எந்த ஆலயங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரை எழுந்தருளச் செய்து முதற் பூசையும் நடத்திவருகின்றனர். சிவனுடைய கோயில்களிலுங் கூட விநாயகருக்கே முதற் பூசை நடைபெறுகிறது. சிவபெருமான் முன் னொருகாலத்தில் முப்புரங்களை அழித்தற் காகச் சென்றபோது விநாயகரை நினையாது தேரில் இவர்ந்து சென்றார். அப்பொழுது அத் தேரின் அச்சு முறிந்ததாகவும் பின்னர் விநா யகப் பெருமானை நினைந்து வழுத்தியபொழுது முறிந்த அச்சுப் பொருந்தியதாகவும் புரா ணங்கள் கூறுகின்றன. இவ்வாறு தேர் முறிந்த இடம் அச்சிறுபாக்கம் என இன்றும் அழைக் கப்படுகிறது. பூமியையே தேராகவும் மகா மேரு மலையை வில்லாகவுங் கொண்டு சென் றார். நாம் உணரும்போது விநாயகப்பெரு மானை நினையாமற் பூமியின் அச்சே இற்ற தென அறியக்கிடக்கிறது சுருங்கக் கூறினால் விநாயகனை மறந்தால் எமது வாழ்க்கையா கிய அச்சே முறிந்து தள்ளாடும் நிலை வந்து விடும் என்பது தெரிகிறது. எனவே, யாவ ராயினும் என்ன கருமத்தைத் தொடங்கினா லும் பெருமானையே முதலில் வழிபட்டு அவ் வக் கருமங்களையாற்றினால் அவை யனைத்தை யும் நிறைவுறச் செய்வான் விநாயகன்.

### விநாயக புராணம்:

விநாயகாலயங்களிலே கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாதப் பூர்வபக்கச் சஷ்டி வரையுள்ள இரு பத்தொரு நாட்களும் விநாயகபுராணம் படிப்பது வழக்கம். இந்த நாட்கள் விநாயக நோன்புக்குரிய நாட்களாகும். திருமால் குருட்டுப் மாம்பாகச் சாபம் பெற்று விமோ சனமடைந்த தினமே விநாயக சஷ்டி தின மென்றுங் கூறுவர். தீர்க்காயுள், இலட்சுமீ கரம், நோயின்மை முதலிய சிறப்புக்கள் விநாயக விரதமனுட்டிப்பதாலும் விநாயக புராணம் கேட்பதாலும் உண்டாகின்றன என் பர். திரிபுரனை அழித்தற்காகச் சோதியுட் சோதியாகிய சிவபெருமான், விநாயகரை மன தில் தியானித்து ஏகாட்சர மந்திரத்தை ஜெபித்து யோகத்திலிருந்தார். அந்த நேரத் தில் விநாயகமூர்த்தி சிவனுடைய முகத்தி லிருந்து தோன்றி, "தனது பெயர் கணேசர்" என்று கூறினர். திரிபுரனை வதைத்தற்குத் தனது மந்திரத்தையும் அதன் பீஜ அட்ச ரத்தையும் சிவபெருமானுக்கு உபதேசித்த வரும் அவரே. இதனாற் செவிகுளிர்ந்த சிவ பெருமான் சகல கணங்களுக்கும் தலைவராம் பதவியை விநாயகருக்கு அருளினர். இன்னும் "கணானந்துவா" என்னும் மந்திரத்தைக் கிருச்சதம முனிவர் தனது மகன் திரிபுர னுக்கு உபதேசித்தாரென்றுங் கூறுவர்.

"தந்தை தானே மகனாகச் சாரு மென்னு
முறையாலும்
எந்தை பெருமான் அருள்செய்த இயல்பி
னாலும் கிருச்சதமன்
மைந்தன் தனக்கு கணானந்துவா
வென்மனுவை உபதேசித்
தந்தண் மறைநூல் விதியானே அனுஷ்டிப்
பதுவும் புகன்றெழிந்தான்."

இச் செய்திகளையெல்லாம் எடுத்துரைப் பது விநாயக புராணமாகும்.

### நிவேதனப் பொருள்கள்:

இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடனெய்
என்பொரி யவல்துவரை—இளநீர்வண்
டெச்சில்பய றப்பவடை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை—தனிமூலம்
மிக்கஅடி சில்கடலை பட்சண மெனக்கொளொடு
விக்கிநச மர்த்தனெனும்—அருளாழி
வெற்பகுடி லச்சடில வில்பரமர் அப்பரருள்
வித்தகம ருப்புடைய —பெருமானே.

கரும்பு, அவரை, கனிகள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், வடை, பச் சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், மா, கொழுக் கட்டை, கிழங்கு, அடிசில், கடலை முதலியன வாக அமைந்த நிவேதனப் பொருட்களை சிற்றுண்டியாகக் கொண்டருளுபவன் விநா யகன். உலகம் அனைத்தையும் தன் பருத் தொந்தியில் வைத்துக் காக்கும் பெருமா னுக்கு நாம் படைப்பவை அனைத்தும் சி றுண்டிகள் போன்றவையே, மலையத்த சுவாமிக்குக் கடுகத்தனை கற்பூரம் என் சொல்லுவார்கள். அதுபோல நம்மன்பி அறிகுறியாக இவற்றைப் படைக்கிறோ ஆணவமலத்தை நீக்கி அறிவைப் பிரகா சச் செய்யவேண்டும் என்பதே தேங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைப்பதன் கருத்தாகும். குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான நம் தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. வெற்றிலை நம்முடலைக் குறிக்கும். பாக்கு செல்வத்தைக் குறிக்கும். வாழைப்பழங்கள் நல்வினை தீவினைகளைக் குறிக்கும். எனவே, ஆரோக்கியம், செல்வம், பாவபுண்ணிய விடுதலை ஆகியவற்றை விரும்பி நிற்கின்றோம் என்பதையே தேங்காய் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அருச்சனை செய்தல் குறிக்கிறது.

## பொல்லார் இணைமலர்:

சைவத் திருமுறைகளைத் தொகுத்தளித்தவர் நம்பியாண்டார் நம்பிகளாவர். பத்தாவது நூற்றாண்டிலே வாழ்ந்த இவர் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்றவர். கலைஞானங்களைக் கல்லாமலே கற்பித்த பெருமை விநாயகனுக்கு உண்டு. தில்லையிலே திருமுறைகள் இருக்கும் இடத்தை நம்பிக்குக் காட்டி வைத்தவரும் அவரே. பெருமானின் அருட்கட்டளை ஏற்றுத் திருமுறைகளைக் கண்டெடுத்துப் பதினொன்றாக வகுத்தவர் நம்பி இன்று நாமெல்லாம் திருமுறைகளை அறியவைத்த பெருமான் விநாயகனே என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

சைவசித்தாந்த சாத்திரங்களுக்குள் முடிமணி போல் விளங்குவது சிவஞான போதம். பன்னிரண்டு சூத்திரங்களால் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளைத் தெளிவாக விளக்கிய ஒப்பற்ற நூல் சிவஞானபோதமே. இதனை ஆக்கித்தந்த மெய்கண்டதேவர் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்றவர். பொல்லாப்பிள்ளையாரை வணங்கி நூலைத் தொடங்குமிடத்தில்,

'கல்லால் நிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே''

என்று போற்றுகிறார்.

எனவே, சராசரங்களைச் சார்ந்து நிற்பவரும் எல்லாக் கணங்களுக்கும் இறைவராக விளங்குபவரும் பெரிய தோற்றத்தையுடையவருமாகிய விநாயகப் பெருமானை வணங்கி வருவினைகளைப் போக்குவோமாக.

''உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே''

(செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பத்துச் சொற்பொழிவுகள் என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டி

## வீரகத்தி விநாயகர்

# திருத்தல வெண்பா

செ. கதிரேசர்பிள்ளை

### காப்பு

காட்சிமிகு கொல்லங் கலட்டி விநாயகரின்
மாட்சி கவிசொல்ல வந்தவெனை — ஆட்சிபுரிந்
தன்றடிமை கொண்டுறையும் அப்பரனே காத்திடுவான்
நின்றிறைஞ்சு கின்றேன் நினைந்து.

(1)

### தலப்பெயர்

அசைநிலையொன் றேட்டுகோர் சாரியையவந் தெய்தி
இசையுங்கல் சேர்நிலம்பின் ஏறின் — திசையெல்லாம்
வெல்வீர கத்தி விநாயகனார் மேவிடமாம்
கொல்லங் கலட்டியெனக் கூறு.

அசைநிலை — கொல்; சாரியை — அம், கல்சேர்நிலம் — கலட்டி மூன்றும் முறையே சேரிற் கொல்லங் கலட்டியாதல் காண்க.

(2)

பைங்கொடியின் சார்பாற் பணவரவு கொள்ளுதலாற்
சங்கரனேர் கொல்லங் கலட்டியே — துங்கமிகு
வீரகத்தி நாம விநாயகனார் தாம்விரும்பிச்
சேரகத்தி னுமமெனத் தேர்.

முதலாம் அடி சிவனுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
சிவன்: பைங்கொடி — பசிய கொடிபோல்வாராகிய பார்வதியம்மை. பணவரவு = பணம் + அரவு: படத்தையுடைய பாம்பு.
கொல்லங்கலட்டி: பைங்கொடி — வெற்றிலை, பணவரவு — பணமாகிய வருமானம்.

(3)

மாவையுற் றோர்பாற் கடல்மருவ லால்மாலாந்
தேவைநிகர் கொல்லங் கலட்டியே — பூவிற்
கயமா முகத்தவுணற் காய்ந்தருளும் முக்கட்
கயமா முகனுறைவு காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் அடி விஷ்ணுவுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை. விஷ்ணு: மாவையுற்று — மா — இலக்குமி; இலக்குமியைப் பொருந்தி; ஒரு பாற்கடல் மருவலால் — ஒப்பற்ற பாற் கடலைச் சேர்ந்து.

கொல்லங்கலட்டி: மாவையுற்று — மாவிட்டபுரத்தின் ஒரு பகுதியாகப் பொருந்தி; ஒரு பால் கடல் மருவலால் — ஒரு பக்கத்தே (வடதிசையில்) கடல் அமைந்து விளங்குவதால், மாவாந்தேவு: திருமாலாகிய தெய்வம்; கயமாமுகத்தவுணன்: கயமுகாசுரன்; கயமாமுகன்: ஆனைமுகமுடைய விநாயகர்.

(4)

பூவிருக்கை யாற்புலவர் போற்றுதலால் நான்முகனுந்
தேவனைய கொல்லங் கலட்டியே—தீவினைகள்
அஞ்சக் கரத்தால் அருளும் விநாயகனும்
பஞ்சக் கரத்தான் பதி.

முதலாம் அடி பிரமாவுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
பிரமா: பூவிருக்கை தாமரைப் பூவாகிய ஆசனம் புலவர் போற்றுதல்—தேவர்கள் மதித்தல்.
கொல்லங்கலட்டி: பூவிருக்கை—மலர்கள் நிறைந்திருத்தல் புலவர்—பாவலர்.
அஞ்சக் கரத்தால் — அஞ்சும்படி தும்பிக்கையால்
பஞ்சக் கரத்தான் — ஐந்து கரமுடையவன்.

(5)

பொன்கலையை நல்விழியாப் போற்றுதலிற் பார்வதியாம்
மென்கொடிநேர் கொல்லங் கலட்டியே — என்கவலை
நீக்குமரன் அன்னையுமை நேசமுடன் நல்கவரு
கோக்குமரன் வாழுங் குடி.

முதலாம் அடி பார்வதிக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
பார்வதி: பொன் — இலக்குமி; கலை—கலைமகள். இலக்குமியையும் கலைமகளையும் இரு கண்களாகப் பெற்றிருப்பவர்.
கொல்லங்கலட்டி: பொன்—பொருள்; கலை—கல்வி. பொருளையும், கல்வியையும் இருகண்ணுக மதித்து வாழுதல்.
நீக்குமரன்: நீக்குகின்ற அரன் = சிவன்.
கோக்குமரன்: தலைமகன் (கோ = தலைமை)

(6)

வள்ளிபடர் கிஞ்சுகத்தின் சேயொளியால் மாமுருக
வள்ளல்நேர் கொல்லங் கலட்டியே — கள்ளவிழும்
போதகத்தின் வண்டாய்ப் புகும்அடியார் கண்களிக்கும்
போதகத்தின் இன்பப் புகல்.

முதலாம் அடி முருகனுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
முருகன்: வள்ளி படர்—வள்ளியம்மை வலப்பாகத்துப் பொருந்தியிருத்தல்; இஞ்சுகம் = முள்முருக்கு, இங்கே ஆகுபெயராய் மலரையுணர்த்திற்று. கிஞ்சுகமலரின் தொகுதியாற் கிளரும் கூட்டமாகிய சிவந்த ஒளி செவ்வொளி மேனி முருகனை உணர்த்தும் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டி: வள்ளி—கிழங்கு பெறுவதற்காகப் பயிரிடப்படும் வள்ளிக் கொடி. வள்ளிக்கொடி கிஞ்சுக மரத்திற் படரவிடப்படுவது குறித்தது.

போதகம் = போது—பூ; அகம் உட்புறம் (போது + அகம்)

போதகம் = யானைக் கன்று. புகல்—இருப்பிடம்.

(7)

நாற்றந்த வேழமா நல்லரம்பை சேர்தலிற்பொன்
மேற்றலமாங் கொல்லங் கலட்டியே—கூற்றுதைத்த
சங்கரனார் நல்குந் தலைமகனும் வீரகத்தி
ஐங்கரனார் வாழ்வென் றறி.

முதலடி பொன்னுலகுக்கும், கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.

பொன்னுலகு: நாற்றந்த வேழம் = நால் + தந்த + வேழம் = நான்கு தந்தங்களையுடைய ஐராவதமென்னும் வெள்ளையானை. ஆ: காமதேனுவாகிய பசு. அரம்பை: தேவப்பெண்கள்.

கொல்லங்கலட்டி: நாற்று + அந்த + வேழம்; முளைக்கச் செய்கின்ற அந்த நல்ல கரும்பு; மா—மாமரம்; அரம்பை: வாழை.

பொன்மேற்றலம்: சுவர்க்கமாகிய மேலுலகம்: வாழ்வு: வைகுமிடம்.

# நன்றியுரை

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் 6-2-76-ல் சிறப்பாக நடைபெற்றது. திருப்பணி வேலைகள் 1975-ம் ஆண்டு வைகாசி மீ ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது மாதங்களுக்குள் பல்லாயிரம் ரூபா செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. வேலை செய்பவர்கள் பெருமான் திருவருளால் எம்மிலும் பார்க்க ஊக்கத்தோடு துரிதமாக வேலைகள் செய்தனர்.

ஆலய மகாமண்டபம் நிருத்த மண்டபம் விதிப்படி உயர்த்தி வரிவர்க்கங்கள் வைத்தும் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் தளவரிசை பதித்தும் தூபிகள் திருத்தி சித்திர வேலைகள் செய்தும் சுதைகள் வைத்தும் மிகமிகத் திறமையாக அமைத்துத் தந்த சிற்பாசாரி திரு. மு. மார்க்கண்டு அவர்களுக்கும் குழுவினருக்கும் முதன்முதன் தனது கைவண்ணத்தை தனது சுதைகளில் காட்டி பலவருட அனுபவமுடையவர்களால் செய்யப்பட்டது போல் துரிதமாகச் செய்த சிற்பக் கலையரும் மார்க்கண்டு அவர்களின் சிரேஷ்ட புத்திரனுமாகிய பன்னீர்ச் செல்வத்துக்கும்,

மண்டபக் கூரை வேலையை 10 நாட்களுக்குள் மிக விரைவாகச் செய்த திரு. கி. பரராசசிங்கம் அவர்களுக்கும், கதவு வேலைகளை மிக அழகுடன் செய்துதந்த திரு. த. செல்லத்துரைக்கும் குழுவினருக்கும், சிரமதானமூலம் பல வேலைகளைச் செய்த கொல்லங்கலட்டி வாலிபர்களுக்கும் நடேஸ்வராக் கல்லூரிச் சாரணர்களுக்கும் சாரணர்களை அனுப்ப அனுமதித்த கல்லூரி அதிபர்களுக்கும் மின் இணைப்புக்களை ஆலயம் முழுமைக்கும் புதிதாக சிரமதானமூலம் செய்த இருவருக்கும்,

''மத்தாப்பு'' என்ற பல்சுவைக் கதம்பநிகழ்ச்சியை எமக்களித்த K. S. பாலசந்திரன் அவர்களுக்கும் விழாப் பிரவேசச் சீட்டுக்களை விற்பனை செய்த அன்பர்களுக்கும் இவ்விழாவை ஒழுங்கு செய்தவருக்கும் இவ்விழாவை நடத்த இடவசதி அளித்த மகாஜனக் கல்லூரி அதிபருக்கும் வடமாகாணக் கல்வியதிகாரி அவர்களுக்கும் பிரவேசச் சீட்டுக்களுக்கு வரிவிலக்களித்த தெல்லிப்பழைக் கிராமசபை விஷேட ஆணையாளர் அவர்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மற்றும் எம்முடன் ஒத்துழைத்த எல்லோருக்கும்உதவிசெய்த சில அன்பர்களை சில சத்திராதிகள் தடுத்தும் அவர்களின் கூற்றைக் கேளாது எமக்கு உதவிசெய்தவர்களுக்கும் மேலும் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற நிதியுதவியளித்த அன்பர்கள் எல்லோருக்கும் இடைவிடாது திருப்பணிகளைச் செய்ய தொகைப் பணத்தை வட்டியில்லாக் கடனாகத் தந்த இருவருக்கும் சிறுசிறு தொகையாக கைகடனாகத் தந்தவர்களுக்கும் வட்டிக்குக் கடனாகத் தந்தவர்களுக்கும் கும்பாபிஷேகம் தேவஸ்தான ஆதினகர்த்தா சிவஸ்ரீ பொன். அம்பலவாணக் குருக்கள் இருக்கும்போதே செய்யவேண்டும் என பல வகையில் ஊக்குவித்த எனது சகோதரர் போல் அன்புள்ள அன்பன் ஒருவருக்கும் மற்றும் பலவகையில் ஊக்கமும் ஆக்கமும் தந்தும் கோள் குண்டணிகளுக்குச் செவிசாய்க்காது எமக்கு உதவிசெய்த எல்லோருக்கும் தேவஸ்தான ஆதினகர்த்தர் சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் நன்றி தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் எல்லா நன்மைகளும் மேன்மேலும் பெருகத் திருவருள் புரிய அவனது பாதகமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

இக் கும்பர்பிஷேகக் கிரியைகளை சர்வே போதகராக இருந்து மேற்பார்வை செய்த தென் இந்தியா வேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத்தலைவராகவும் கரணவாய் வெல்லனிற் பிள்ளையார் கோவில் குருக்களுமான சிவஸ்ரீ தி. கனகசபைக் குருக்கள் அவர்களுக்கும் இவ்வாலய உற்சவாசாரியாராகப் பல்வருடமாகக் கடமையாற்றியவரும் கும்பாபிஷேகப் பிரதம குருவும் வேதாரணிஸ்வர சுவரமி தேவஸ்தானத் தர்மகர்த்தாக்களுள் ஒருவரும் வெல்லனிற் பிள்ளையார் கோவில் குருக்களுமான சிவஸ்ரீ க. வேதாரணியக் குருக்கள் அவர்களுக்கும் மற்றும் உதவிக் குருமாராகக் கடமையாற்றிய வேதாரணியேஸ்வர சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்களான சிவஸ்ரீ க. பொன்னையா குருக்கள் அவர்களுக்கும் சிவஸ்ரீ க. தியாகராசாக் குருக்கள் அவர்களுக்கும் சிவஸ்ரீ செ. விஸ்வநாதக் குருக்கள் அவர்களுக்கும் நாயன்மார்ட்டு சிவஸ்ரீ அ. நடராசக் குருக்கள் அவர்களுக்கும் மற்றும் பரிசாரகர்களுக்கும் தேவஸ்தான ஆதீனகர்த்தா சார்பிலும் பக்தகோடிகள் சார்பிலும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இம்மலர் வெளியிடுவதில்லை என்று தீர்மானித்தும் 34 வருடங்களின் பின் நடைபெற்ற இக்கும்பாபிஷேகத்திற்கு அதுகும் இலங்கையில் நடைபெறுத ரஜதபந்தன மகா கும்பாபிஷேகத்துக்கு மலர் வெளியிட வேண்டும்என பல வகையிலும் ஊக்கம் தந்த அன்பனுக்கும் இம்மலரை மிகக் குறுகிய காலத்தில் அச்சிட வேண்டிய நிலையேற்பட்டு அச்சக அதிபரைச் சந்தித்தபோது மலர்ந்த முகத்தோடு சம்மதித்து அச்சிட்டுத்தந்த காங்கேசன்துறை சந்திரா அச்சகத்தாருக்கும் கட்டுரைகள் ஆசியுரை தந்தவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. அத்தோடு விநாயகப் பெருமானுடைய கிருபாகடாட்சம் உண்டாகுக.

வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை

இங்ஙனம்
**சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்**
ஆதீன கர்த்தாவுக்காக

University of Jaffna
250271
Library

250271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டனன் கண்களால்....!

9-2-73 வெள்ளிக்கிழமை! அந்நாளை எந்நாளுமே மறக்க முடியாது. அரிய நாயகன் புலத்து அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் குடமுழுக் காடிய திருநாள் அது. அவர் தம் அழகொளிரும் திருவழகைக் கண்களால் கண்டு பரவசமுற்ற தினமது. அவர் திருக்காட்சியினைக் காண நாலாயிரம் கண் படைத்திலனே இந்த நான்முகன்... என எம்முள்ளமெல்லாம் ஏங்கியதினமது.

ஆம். புங்குடுதீவு மக்களுக்கு சிறப்பாக இருபிட்டி வாழ் மக்களுக்கு அன்றையத்தினம் பிறவிப் பெரும் பயன் பெற்ற தினம் எனக் கூறலாம். அன்று ஆலயத்தில் இடம் பெற்ற குடமுழுக்குக் கிரியைகள் அனைத்துமே எம்மனக் கண்ணை விட்டு இன்னும் அகலவில்லை.

பல்லாண்டு காலமாக இருபிட்டி மக்கள் கண்ட கனவு அன்று நனவாயிற்று. வெவ்வினையை வேரறுக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் திருவருள் பொலிவை அன்று கண்களால் காணக்கூடியதாயிருந்தது.

"கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பனவாகாதே...." எனக் கண்டோரனைவரும் ஆராமையாற் சொல்லி ஆனந்த பரவசமுற்றனர். "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் துன்னிய பிணை மலர்க்கையினர் ஒருபால், தொழுகையர், அழுகையர் துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்...." நின்று வீரகத்தி விநாயகரை வழிபட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அக்காட்சியைக் காணாத கண் என்ன கண்ணே!

— "ஆனந்தன்"

Donated by
Mr. ATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

"எப்போதகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போதகத்தின் கழல்"



ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகள் யாவும் சிறப்புற நிகழ்தற்கு, எம்முடன் ஒத்தழைத்தோர் அனைவர்க்கும் எம் நன்றி சென்ற விடமெல்லாம் இல்லை என்னாது நிதியுதவியளித்து எம் பெருமானின் திருப்பணிகளை நிறைவேற்ற உதவிய வர்களை நாம் என்றுமே மறக்கமுடியாது. அவர்களனை வருக்கும் எம் உளமார்ந்த நன்றி. மகா கும்பாபி ஷேகத்திலும், மண்டலாபிஷேகத்திலும் பங்குகொண் டுழைத்த குருக்கள்மார், அர்ச்சகர்கள், அடியார்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றி என்றும் உரியது. கும்பாபிஷேகக் கிரியைகளைத் தலைமைதாங்கி நடத்திய சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர் களுக்கும், கும்பாபிஷேக மலர் வெளியீடு செய்யும் மலர்க்குழுவினருக்கும் ஆலய பரிபாலன சபையின் சார்பில் நன்றி கூறுகிறோம். நாம் மேற்கொண்டபணிகள் அனைத்திலும் பங்கு கொண்டு பலவகையிலும் உதவியளித்தோரனைவருக்கும் குறிப்பாக ஆலய பரிபாலன சபையினருக்கும் எம் நன்றி என்றும் உரியதாகுக.

க. ஆறுமுகம்
(பொருளாளர், ஆலயபரிபாலனசபை)

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA LIBRARY

விரைவில் வெளிவருகிறது!

பிரபல எழுத்தாளர் "ஈழத்துச்சிவானந்தன்" எழுதிய

"சேக்கிழார்" (நாடகம்)

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம் 624—73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW DHAWALAGIRI LODGE

**27, GALLE ROAD, — COLOMBO-4.**




# நியூ தவளகிரி லொட்ஜ்

27, காலி வீதி, - கொழும்பு-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வெவ்வினையை வேரறுக்கும்
வீரகத்தி விநாயகரின் திருத்தாள் போற்றி.




# S. SUBRAMANIA PILLAI & CO.

IMPORTERS & GENERAL MERCHANTS

**No. 121, 5th Cross Street,**

**COLOMBO-11.**

Store :
248, SEA STREET,
COLOMBO-11.

T'phone : 2 5 5 6 7

T'grams : " MANGALAM "


அட்டைப்படம் அச்சு : குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org